**விமர்சி 28**

## தகவல் சுதந்திரம் இல்லாவிடத்து?

யுத்தம் உச்ச கட்டத்திலிருந்த காலத்திலும் அதன் பின்னரான காலத்திலும் மனிதாபிமான செய்திகளை அறிக்கையிடுவதிலுள்ள வேறுபாடுகள் குறித்தும் பேசும் போது தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய விடயமொன்றுள்ளது. யுத்த உச்ச கட்டத்திலிருந்த காலம் என சில வேளை நாம் மொழிநடையில் பாவித்த போதும் நாம் பேசும் தலைப்பு யுத்தம் நடைபெற்ற காலத்தில் இடம் பெற்ற அறிக்கையிடல் தொடர்பானதாகும். காரணம், மே மாதம் 18 ஆம் திகதி மாலை படைத்தளபதிகள் ஜனாதிபதிக்கும், மே மாதம் 19 ஆம் திகதி ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக நாட்டுக்கும் முடிவுற்றதாக தெரிவித்த யுத்தம் இரண்டு வருடங்களும் 10 மாதங்களுக்கும் நீடித்தது. இதனால் இக் காலமும் மே மாதம் 20 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் காலத்தை யுத்தம் நடைபெற்ற காலம் மற்றும் யுத்தத்தின் பின்னரான காலம் எனப்பார்ப்பது பொருத்தமாகும். நாம் மனிதாபிமான செய்திகளை ஆய்வு செய்ய ஆரம்பித்த கடந்த வருடம் அக்டோபர் முதல் 2009 மே மாதம் 19 ஆம் திகதி வரையான காலத்தை ஒப்பிட்டும் பார்க்கும் போது அதன் பின்னரான காலத்துக்குள் வேறுபாடுகள் காரணப்படுவதை தெளிவுபடுத்தவே இத் தலைப்பை தெரிவு செய்தோம். சில வேளைகளில் சில ஊடகங்கள் மனிதாபிமான செய்தி அறிக்கையிடுவதில் மாறுதலான போக்கை கடைப்பிடித்தாலும் அரச தரப்பு வழமைபோல் எதிர்ப்பைக் காட்டுவதை கடந்த வாரம் காணக்கூடியதாகவிருந்தத, இந்த எதிர்ப்பு இரண்டு விதமாகக் காட்டப்பட்டிருந்தது. சர்வதேச ஊடகங்கள் இலங்கையின் மனிதாபிமான பிரச்சினைகள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கை தொடர்பாக அரச அதிகாரம் மிக்க சிலரது அறிக்கைகள் மூலமமாக ஒரு எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. அசோசியேட்டட் பிரஸ் செய்தி சேவையின் கொழும்பு கிளையின் முக்கியஸ்தர் ரவி நெஸ்மானின் வீசாவை நீடிக்க மறுத்து அவரை நாட்டைவிட்டு வெளியேறச் செய்ததுமூலம் இரண்டாவது எதிர்ப்பு காட்டப்பட்டிருந்தது அதற்கு இச் செய்திச் சேவைக்கு இளைக்கப்பட்ட அநீதி குறித்து எதிர்ப்பு தெரிவிக்கும் ஊடக சுதந்திரத்துக்காக குரல் எழுப்பும் அமைப்புகள் மனிதாபிமான செய்திகளை அறிக்கையிட்டதே இதற்குக் காரணம் என கருத்து தெரிவித்துள்ளன. சேவையின் சர்வதேச செய்திப் பிரிவின் சிரேஷ்ட முகாமைத்துவ ஆகிளியர் இது போன்ற அறிக்கையிடல் இதற்கு காரணமாக இருக்கலாமென தெரிவித்ததையும் மேற்கொள்காட்டியுள்ளது. அசோசியேட்டட் பிரஸ் செய்திச் சேவையின் பிரச்சினைக்குறியதென கூறப்படும் செய்தியை இரு ஆங்கிலப் பத்திரிகைகள், ஒரு தமிழ் பத்திரிகை மற்றும் ஒரு சிங்களம் பத்திரிகையும் வெளியிட்டுள்ளன. ஜனாதிபதி செயலகத்தின் சர்வதேச ஊடகப் பணிப்பாளர் லூஷன் ராஜகருணாநாயக்க அரசின் சட்ட திட்டங்களுக்கமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்ததையும் இச் செய்தியில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு இரண்டு வருட கால விசா வழங்கப்படுவதுடன் மூன்றாம் வருடத்துக்கு விசா நீடிப்பு கோரியபோது அதுஇது தொடர்பாக அரசின் செயற்படும் விதத்தின் அடிப்படையிலேயே மறுக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவர் இவ்வாறு கூறியபோதும் ரவி நெஸ்மானுக்கு முன்னர் இச் செய்திச் சேவையின் தலைவர் 1997 முதல் 2007 வரை 10 வருட காலம் இலங்கையில் கடமையாற்றியதாக அசோசியேட்டட் செய்திச் சேவை தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளது. எப்படியிருந்தும் இந்த அடிப்படைவிடயங்களை மேற்கூறிய மூன்று பத்திரிகைகளும் தங்களது செய்தியில் சேர்த்துக் கொண்டுள்ளன. அத்துடன் தமிழ் பத்திரிகை அதில் குறிப்பிட்ட மேலும் சில விடயங்களை சேர்த்து செய்தி வெளியிட்டுள்ளது, இதன்படி கடந்த வருடம் குறைந்த பட்சம் இலங்கையில் வெளிநாட்டுச் செய்திச் சேவைகளின் 11 ஊடக வியலாளர்கள் நாட்டை விட்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் 2006 முதல் 16 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சம்பவத்தைக் கண்டித்து எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையும் இத் தமிழ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இரண்டு வருடத்துக்கு மேல் இலங்கையிலிருக்க அனுமதி இல்லை என லூஷன் ராஜகருணாநாயக்க தெரிவித்திருப்பது குறித்து கருத்து தெரிவிக்கும் அந்த அமைப்பு தாம் இதுபோன்ற சட்டம் குறித்து ஒரு போதும் கேள்விப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையின்படி குறைந்த பட்சம் எட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு 2009 ஜனவரி முதல் இதுவரை நாட்டைவிட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அசோசியேட்டட் செய்திச் சேவையின் அறிக்கை மற்றும் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின் அறிக்கை ஆகியவற்றுக்கிடையில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கையில் வித்தியாசம் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

சிங்களப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி விசேடமாக காணப்படுகிறது. ஏனைய மூன்று பத்திரிகைகளும் மேற்படி ஊடகவிலாளர்களின் விசா மறுக்கப்பட்டதை தலைப்பில் குறிப்பிட்டிருந்தன. இருந்தும் இந்த சிங்களப் பத்திரிகை 'இடம் பெயர்ந்தோர் வாழும் முகாம்களை ஹிட்லரின் வதை முகாம்களுடன் ஒப்பிட்ட ஊடகவியலாளர் நாட்டைவிட்டு அனுப்பப்பட்டார்' என்ற தலைப்புடன் இச் செய்தியை வெளியிட்டுள்ளது. இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இலங்கையில் படுகொலை

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com

செய்யப்பட்டுள்ளதாக உலகம் முழுவதும் தவறான தகவலைப் பரப்பிய வெளிநாட்டு ஊடகவியலாளரான ரவி நெஸ்மன் மேலும் இந் நாட்டில் தங்கியிருக்க விடுத்த வேண்டுகோளை அரசு நிராகரித்ததால் நேற்று (22) நாட்டைவிட்டு வெளியேறினார். என்று முதல் பந்தியில் தமது கருத்தையும் இணைத்து வெளியிட்டுள்ளது. ஏனைய பத்திரிகைகள் மேற்கொண்ட எதுவிதமூலங்களும் இதில் இல்லாததுடன் இருபதாயிரம் பேர் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபைக்கு பொய் அறிக்கையை வழங்கியது இவரெனவும் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளதாக செய்தியின் இறுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் செய்தி நேரடியாக ஊடகவியலாளருக்கெதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

எப்படியிருந்தும் மனிதாபிமான செய்தி அறிக்கையிடலே இச்சம்பவத்துக்கு காரணமென தெளிவாகின்றது. இதற்கும் மேலாக மேலே குறிப்பிட்டவாறு அரச அதிகிரிகளுக்கு எதிர்ப்பு வெளியிட்ட செய்திகளுக்கும் மனிதாபிமான செய்தி அறிக்கையிடலே காரணமாகும். இது சர்வதேச ஊடகங்களும் வெளியிட்ட செய்திகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவையாகும்.

இம்முறை ஆய்வுக்குட்படுத்தப்பட்டது ஜுலை மாதம் 20 முதல் 26 வரையிலான ஆறு நாட்களில் 72 பத்திரிகைகள் 5 தொலைக்காட்சி செய்தி ஒளிபரப்புகளாகும். இக் காலத்துக்குள் ரவி நெஸ்மன் குறித்து மேற்கூறப்பட்ட 4 பத்திரிகைகள் மாத்திரமே செய்தி வெளியிட்டுள்ளன. மேலுமொரு ஞாயிறு சிங்களப் பத்திரிகையின் செய்தியொன்றில் நாம் குறிப்பிட்ட இரண்டு விடயங்களுக்கும் பொருந்தக் கூடிய பல குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளன. பல ‘வெளிநாட்டு ஊடகங்கள் கூறும் கதை” என்ற கட்டுரையில் யுத்தத்தை விற்றுப் பிழைக்கும் சர்வதேச ஊடகங்கள் என்ற உப தலைப்பின் கீழ் பணம் தேடுவதற்காக சர்வதேச ஊடகங்கள் இலங்கை தொடர்பாக பொய்த் தகவல்களை வெளியிடுவதாக கட்டுரையாளர் குற்றம் சாட்டுகின்றார் இலங்கையில் இடம் பெயர்ந்தவர்கள் வாழும் முகாம்களில் வாரமொன்றுக்குள் 1400 பேர் இறப்பதாக ஜுலை 9ஆம் திகதி லண்டன் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டதாகவும், யுத்தத்தின் இறுதி சில வாரங்களில் 20 ஆயிரம் சிவிலியன்கள் கொல்லப்பட்டதாக அப் பத்திரிகை 29 ஆம் திகதி செய்தி வெளியிட்டதாகவும் செனல் 4 தொலைக்காட்சி தொடர்ந்தும் இலங்கை தொடர்பாக பொய்த் தகவல்களை வெளியிடுவதாகவும் பல விடயங்களை கட்டுரையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அன்று யுத்தம் தொடர்பாக தவறான செய்திகளை எழுதியவர்கள் இன்று இடம் பெயர்ந்தவர்கள் தொடர்பாக தவறான செய்திகளை எழுதுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளனர். நியூயோர்க் டைம்ஸ்" டெயிலி டெலிகிராப் பத்திரிகைக்கும் இவ்வாறு பொய்த் தகவல்களை எழுதியுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. சர்வதேச ஊடகங்கள் இலங்கை தொடர்பாக தவறான தகவல்களை வெளியிடுவதாக அரச அதிகாரமிக்கவர்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இடம் பெயர்ந்தோர் வாழும் முகாம்களில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாக சர்வதேச ஊடகங்களில் வெளிவந்த செய்தியொன்று முக்கியமாக அதிகாரத் தரம்பினரின் கவனத்துக்குட் பட்டுள்ளது. வெளிவந்த ஊடகம் குறித்து தெரிவிக்கப்படாவிட்டாலும் ஒரு சிங்களப் பத்திரிகையின் செய்தியொன்றின் மரண வீதம் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளதாக செய்தி வெளிவந்துள்ளது. இலங்கையிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் இறப்பு வீதம் 5.9 ஆகவிருப்பதுடன் சர்வதேச இறப்பு வீதம் 6.2 முதல் 13.2 வரை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் அத்துல கஹுத்தலியனகே தெரிவித்துள்ளார். அத்துடன் ஜுன் 10 முதல் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 1400பேர் இறந்துள்ளதாக தெரிவித்துள்ளது தவறான தகவலெனவும் தெரிவித்துள்ளார். இக் காலப் பகுதிக்குள் 163 பேர் மட்டுமே இறந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இச் செய்தி தொடர்பாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ள கருத்தும் மற்றொரு சிங்களப் பத்திரிகையின் பேட்டியில் வெளிவந்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து இரண்டு தமிழ் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. ‘இடம் பெயர்ந்துள்ள மக்களை சுற்றுலா பயணிகள் தங்கும் ஹோட்டல்களில் தங்க வைக்க முடியாது’ என்ற தலைப்பின் கீழ் இச் செய்தி வெளிவந்துள்ளது. சர்வதேச ஊடகங்கள் பொய்த் தகவல்களை வழங்குவதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்த செய்தியை தமிழ் பத்திரிகையொன்று பிரசுரித்துள்ளது. ஒரு ஆங்கிலப் பத்திரிகை அமைச்சர் மஹிகத் சமரசிங்க முகாம்களில் நிகழும் மரணங்கள் தொடர்பாக வழங்கிய விளக்கத்தைப் பிரசுரித்துள்ளது. தேசிய தொலைக்காட்சியும் இது தொடர்பான இரண்டு செய்திகளை ஒளிபரப்பியது.

எப்படியிருந்தும் ரவி நெஸ்மன் வெளியேற்றப்பட்டது மற்றும் சர்வதேச ஊடகங்கள் பொய்த் தகவல்களை வெளியிடுவது ஆகிய இரண்டு விடயங்களும் இதன்படி ஒரே நோக்கத்தைக் கொண்டதாகவுள்ளது. ஒருபுறம் மனிதாபிமான அறிக்கையிடலாகும். மறுபுறம் அரசு கூறுவது போல் இவை பொய்த் தகவல்களாகும். இலங்கையில் சில ஊடகங்கள் இன்னும் அரச மூலங்களை அல்லது சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதாபிமான செய்திகளை பிரசுரிக்க முயற்சிப்பதுடன் காத்திரமான செய்திகளைத் தேடிப் பிரசுரிக்கும் சர்வதேச ஊடகங்கள் குறித்து எதிர்ப்பு தெரிவிக்கும் செய்திகளையும் பிரசுரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பிரசுரமாகியுள்ளது தவறானதென்றால் அது முறையான அறிக்கையிடல் அல்லவென்பது உண்மை அவை பொய்த்தகவல்கள் என்றால் உண்மையான தகவல்களை ஊடகவியலாளர்கள் பெறுவது எப்படி? தகவல்களை வழங்க அரசு நிறுவனங்கள் தயாரா?

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com

இல்லாவிட்டால் அரசு தெரிவு செய்து வடித்தெடுத்து பொதுவாக வழங்கும் தகவல்களில் மாத்திரம் ஊடகவியலாளர்கள் நம்பிக்கை வைக்க வேண்டுமா? தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் சுதந்திரம் அதேபோல் தகவல்களை வெளியிடும் சுதந்திரம் ஊடகவியலாளர்களின் முன்னால் இருக்கின்றதா? மேற்கூறிய சம்பவங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

சீதா ரஞ்சனி

seetha@cpalanka.org

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com